C.C 378/2013

PW 2

பெயர் கிருஷ்ணமூர்த்தி, த/பெ.ராமசாமி

தேதி 13.08.2024

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது அப்பா ராமசாமி மற்றும் 4 நபர்கள் சேர்ந்து சொத்தை கிரையம் பெற்றதாக நான் கூறுகிறேன் என்றால் சரிதான். அசா1 எனது சித்தப்பா. முதல் விசாரணையில் எதிரிகள் மாவட்ட வருவாய் அலுவலரிடம் தாக்கல் செய்த மேல்முறையீடு தள்ளுபடியாகிவிட்டது எனக் கூறியுள்ளேன். மேற்படி மேல்முறையீட்டு உத்தரவு தான் என்னிடம் காட்டபப்டுவது என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் உரிமையியல் வழக்கு எண் 288/2001 நிலுவையில் இருப்பதால் எந்த முடிவும் எடுக்க முடியாது என்றும் எனவே முருகேசன் தாக்கல் செய்த மேல் முறையீடு தள்ளுபடி செய்வதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும், மேற்படி உத்தரவில் OS 288/2001 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை ரத்து செய்ய தாக்கல் செய்த IA No.334/2002 மனு கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருப்பதாக காட்டப்பட்டள்ளது என்றால் சரிதான். எங்களது கிரைய பத்திரத்தை தவிர முதல் விசாரணையில் கூறியுள்ள மற்ற ஆவணங்களை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். குறிப்பாக எந்தெந்த தேதிகளில் எவ்வளவு விஸ்தீரனத்திற்கு என்ன ஆவணங்கள் ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். மாவட்ட உரிமையியல் நீதமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு விபரம் எனக்கு தெரியாது. நாளது வரை என்ன என்ன உரிமையியல் வழக்குகள் எங்கு நிலுவையில் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால்சரிதான். எங்களது கிரைய பத்திரத்திற்கு முன்பு ஏற்பட்ட ஆவணங்களை ரத்து செய்ய எனது அப்பாவோ மற்றவர்களோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். இனிமேலும் எடுக்கப்போவதில்லை என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அசா1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் அளித்த முதல் விசாரணை நிராகரிக்க தக்கது என்றால் சரியல்ல.